[1993 ஏப்ரல் 30

557—

சிவகெங்கையிலுள்ள உபமண் ஆய்வகத்தை மேம்படுத்துதல்.

*14471—திரு. கே. ஆர். முருகானந்தம் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கையில் தற்போதுள்ள சிறிய உபமண் ஆய்வகத்தை மேம்படுத்தி ஊர்தியுடன் கூடிய நடமாடும் மண் ஆய்வகமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இத்தகைய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை,

திரு. கே. ஆர். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிவகங்கையில் தற்போது சிறிய உபமண் ஆய்வகம் நடந்து வருகிறது, இந்த மண் ஆய்வகத்திலே அங்கேயுள்ள கிராமத்து மக்களெல்லாம் வந்து மண் ஆய்வு செய்ய முடியவில்லை, ஏனென்றால், இந்த நடமாடும் ஊர்தியினுடைய மண் பரிசோதனை நிலையம் பரமக்குடியிலே இயங்கி வருகிறது, இதை நடமாடும் ஊர்தியுடன் கூடிய மண் ஆய்வகமாக மேம்படுத்தினால் அந்தந்த கிராமங்களுக்கு ஊர்தியுடன் சென்று பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் அல்லது சிவகங்கைப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகளெல்லாம் மண் பரிசோதனை செய்து எந்தப் பயிர்களை அங்குள்ள நிலங்களிலே பயிர் செய்யலாம், என்ன இடு பொருளைப் பயன்படுத்தலாம் என்பதையெல்லாம் அறிந்து நல்ல மகசூல் பெற முடியும். அதனால் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு இந்த பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திற்கு தலைநகரமான சிவகங்கையிலே நடமாடும் மண் ஆய்வகமாக இதை மாற்றி, ஊர்தியுடன் கூடிய மண் ஆய்வகமாக மாற்ற, அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 30]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திலே, அங்கேயுள்ள கிராமங்களுடைய எண்ணிக்கை எவ்வளவு என்று கணக்கு எடுத்து அந்த கிராமப் பகுதிகள் பயன் அடைகிற வகையிலே அங்கே சிறிய மண் ஆய்வு மையங்கள் இருக்கின்றன, விவசாயிகள் தங்களுடைய மண் மாதிரிகளை எடுத்து அங்கே தந்து பரிசோதனை செய்து அதனுடைய பரிந்துரையின்படி அவர்கள் இன்றைய தினம் பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். நடமாடும் மண் ஆய்வகம் வேண்டும் என்று சொன்னால் அந்த மண் ஆய்வகத்திலே அனைத்துச் சத்துக்களையும். அதாவது நுண் ஊட்டச்சத்துக்கள் குறைவை அதனால் கண்டு பிடிக்க இயலாது, ஆய்வகங்கள் மூலமாகவே அனைத்து சத்துக் குறைவையும் கண்டுபிடிக்க முடியும், பரிசீலனை செய்ய முடியும். எனவேதான் இந்த ஆண்டு வருடத்திற்கு 12 ஆயிரம் மண் மாதிரி பரிசோதனை இலக்கை அடைய வேண்டுமென்று இந்த அரசு தீவிரமாகப் பணியாற்றி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 558, திரு. டி. எம். ரங்கராஜன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்,

558—

சென்னையில் தீப்பற்றாத வீடுகள் கட்டுதல்.

*17181—திரு. டி. எம். ரங்கராஜன் :

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

சென்னையில் அடிக்கடி குடிசை வீடுகள் தீப்பற்றி எரிவதைத் தடுத்திட தீப்பற்றாத வீடுகளைக் கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் : மாண்பமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.